**மே – 01**

# TNPSC துளிகள்

- தமிழ்நாட்டின் மாநில விலங்கான நீலகிரி வரையாட்டின் இரண்டாவது ஒத்திசைவு கணக்கெடுப்பு ஆனது வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது.
- 2024-25 ஆம் ஆண்டில் 10 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான மொத்தப் பங்குகளைக் கடந்த முதல் இந்திய நிறுவனமாக ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் திகழ்கிறது.
- இந்தியா மற்றும் பிரான்சு ஆகிய நாடுகள் ஆனது, இந்தியக் கடற்படைக்காக 22 ஒற்றை இருக்கைகள் மற்றும் நான்கு இரட்டை இருக்கைகளைக் கொண்ட 26 ரஃபேல்-M விமானங்களை வாங்குவதற்கான அரசுகளுக்கிடையேயான ஒரு ஒப்பந்தத்தில் (IGA) கையெழுத்திட்டுள்ளன.
- உள்நாட்டுப் பிரச்சினைகள் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர மன்றத்தின் (UNPFII) 24வது அமர்வு ஆனது நியூயார்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.
- மத்தியப் பிரதேசத்தின் குனோ தேசியப் பூங்காவில் உள்ள நிர்வா என்ற சிவிங்கிப் புலிகள் ஐந்து குட்டிகளை ஈன்றுள்ளது.
  - இதன் மூலம், மொத்த சிவிங்கிப் புலிகளின் எண்ணிக்கையானது இந்த தேசியப் பூங்காவில் 29 ஆகவும், இந்தியாவில் 31 ஆகவும் அதிகரித்துள்ளது.
- இந்திய வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம் (DGFT) ஆனது, வளர்ந்து வரும் வர்த்தகப் பிரச்சினைகளில் வழி செலுத்துவதில் பங்குதாரர்களுக்கு உதவுவதற்காக பிரத்தியேக 'உலகளாவிய சுங்கக் கட்டணம் மற்றும் வர்த்தக உதவி மையத்தினை' தொடங்கி உள்ளது.
- மேகாலயாவின் ரின்டியா பட்டு & காசி கைத்தறி நெசவு ஆகியவை மிகவும் அதிகாரப் பூர்வமாக புவிசார் குறியீட்டினைப் பெற்றுள்ளன.
- பாப் பாடகி கேட்டி பெர்ரி மற்றும் ஐந்து பெண்கள் ப்ளூ ஆரிஜின் ஏவுகலம் மூலமாக விண்வெளிக்குப் பயணித்து மிகவும் வெற்றிகரமாக புவிக்குத் திரும்பியுள்ளனர் என்ற நிலையில் இது கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலான காலக் கட்டத்தில் மேற்கொள்ளப் பட்ட முதல் அனைத்து மகளிர் பயணத்தைக் குறிக்கிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## 2025 ஆம் ஆண்டு திருத்தம் - தமிழ்நாடு பஞ்சாயத்துகள் சட்டம், 1994


- இந்த மாநிலம் முழுவதும் உள்ள கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நிறுவப்பட்ட விளம்பரப் பலகைகள், மின்னணுத் திரைகள் மற்றும் அறிவிப்புப் பதாகைகள் குறித்த ஒழுங்குமுறை விதிகள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன.
- இது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்க முயல்கிறது.
- இந்தச் சட்டத்தின் 172-B என்ற ஒரு பிரிவானது, விளம்பரங்களைக் காட்சிப்படுத்தும் விதத்திற்கான விதிகளை உருவாக்க மட்டுமே அரசாங்கத்திற்கு அதிகாரம் அளித்தது, ஆனால் விளம்பரப் பலகைகள், மின்னணுத் திரைகள் மற்றும் அறிவிப்புப் பதாகைகள் நிறுவுவது தொடர்பான விதிகளை ஒழுங்குமுறைப் படுத்தவில்லை.
- இந்த மசோதாவின்படி, தொகுதி மேம்பாட்டு அதிகாரி (கிராமப் பஞ்சாயத்துகள்) கட்டணத்துடன் கூடிய விண்ணப்பங்களைப் பெற்று, அந்த உரிமத்திற்கு அனுமதி

வழங்கலாம் அல்லது வழங்க மறுக்கலாம்.

- வழங்கப்பட்ட ஒரு உரிமத்தினைத் தொகுதி மேம்பாட்டு அதிகாரி ரத்து செய்யலாம் அல்லது இடைநிறுத்தலாம்.
- தேவையான அனுமதிகள் இல்லாமல் நிறுவப்பட்ட எந்தவொரு விளம்பரப் பலகைகள், மின்னணுத் திரைகள் அல்லது அறிவிப்புப் பதாகையையும் பறி முதல் செய்து அகற்ற தொகுதி மேம்பாட்டு அதிகாரிக்கு அதிகாரம் உள்ளது.





## மாநில அரசு ஊழியர்களுக்கான நலத்திட்ட அறிவிப்புகள்




- மாநில அரசின் ஊழியர்களின் பெரு நலனுக்காக தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒன்பது அறிவிப்புகளை அறிவித்துள்ளார்.
- முதலாவது அறிவிப்பின் கீழ் அக்டோபர் 01 ஆம் தேதி முதல் தொடங்கும் வகையில் ஈட்டப்பட்ட விடுப்பிற்கு ஈடான ஊதியம் அளிக்கும் வகையில், 15 நாட்கள் வரையில் ஈட்டப்பட்ட விடுப்பிற்கு ஊதியம் பெறலாம்.

- 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அகவிலைப் படியை 2 சதவீதம் அதிகரிக்க மத்திய அரசு முடிவெடுத்ததன் அடிப்படையில், மாநில அரசும் அதே தேதியிலிருந்து மாநில அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படியை 2% அதிகரித்துள்ளது.
- தற்போது 10,000 ரூபாயாக வழங்கப்படும் பண்டிகை முன்பணம் ஆனது இனி 20,000 ரூபாயாக அதிகரிக்கப்படும்.
- இந்த ஆண்டு முதல், ஊழியர்களின் குழந்தைகளின் தொழிற்கல்வி சார் உயர்கல்வி உதவிக்கான கல்வி முன்பணம் ஆனது 1,00,000 ரூபாயாக அதிகரிக்கப்படும்.
- கலை, அறிவியல் மற்றும் பல்தொழில்நுட்பப் படிப்புகளுக்கு, இது 50,000 ரூபாயாக அதிகரிக்கப் படும்.
- ஐந்தாவது அறிவிப்பில், பாலினத்தை எதுவும் பொருட்படுத்தாமல் அனைத்து அரசு ஊழியர்களுக்குமான திருமண முன்பணமானது, இனி 5,00,000 ரூபாயாக அதிகரிக்கப் படும்.
- தமிழக அரசின் ஆறாவது அறிவிப்பானது, ஓய்வு பெற்ற C & D பிரிவு ஊழியர்கள், அனைத்து வகையான தனிநபர் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதிய தாரர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் பொங்கல் பண்டிகை மிகையூதியம் (போனஸ்) ஆனது 500 ரூபாயிலிருந்து 1000 ரூபாயாக உயர்த்தப்படும்.
- ஓய்வூதியதாரர்கள் தங்கள் குடும்பங்களுடன் பண்டிகைகளை நன்கு கொண்டாடச் செய்வதற்காக தற்போது வழங்கப் பட்டு வரும் பண்டிகை முன்பணம் ஆனது 4,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாயாக உயர்த்தப்படும்.
- அரசு ஊழியர்களின் பழைய ஓய்வூதியத் திட்டம், பங்களிப்பு சார் ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் ஆகியவை குறித்து ஆராய்வதற்காக அமைக்கப் பட்டக் குழுவானது, இந்த ஆண்டு செப்டம்பர் 30 ஆம் தேதிக்குள் அதன் அறிக்கையைச் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படும்.
- மகப்பேறு விடுப்பு ஆனது இனி தகுதி காண் பணிக் காலத்தில் சேர்க்கப்படும் என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

## மின்வாரியத்திற்கு நிதி உதவி


A manifold increase

A look at the tariff subsidies and grants provided by the State over the years to keep its power utility going

| Year | Tariff subsidy (₹ in crore) | Grants (₹ in crore) | Total (₹ in crore) |
|---|---|---|---|
| 2015-16 | 6,879.33 | 1,053.00 | 7,932.33 |
| 2016-17 | 8,484.91 | 2,350.00 | 10,834.91 |
| 2017-18 | 7,724.30 | 4,857.77 | 12,582.07 |
| 2018-19 | 7,693.92 | 5,013.00 | 12,706.92 |
| 2019-20 | 8,053.11 | 5,345.08 | 13,398.19 |
| 2020-21 | 8,269.73 | 7,563 | 15,832.73 |
| 2021-22 | 8,876.36 | 11,671.06 | 20,547.42 |
| 2022-23 | 12,069.97 | 12,315.36 | 24,385.33 |
| 2023-24 | 14,976.42 | 17,127.18 | 32,103.60 |
| 2024-25 | 15,772.21 | 16,076.86 | 31,849.07 |

- மாநில மின் வாரியத்திற்கான மின்சாரக் கட்டண மானியம் மற்றும் உதவித்தொகை வடிவிலான தமிழ்நாடு அரசின் நிதி உதவியானது கடந்த 10 ஆண்டுகளில் சுமார் 300% அதிகரித்துள்ளது.
- 2019-20 ஆம் ஆண்டு முதல், இது சுமார் 137% ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் இந்த உயர்வு ஆனது ஏற்றத்தாழ்வு இல்லாமல் மிகவும் செங்குத்தாக உயர்ந்துள்ளது.

- மானியம் மற்றும் உதவித் தொகையின் அளவு மின் வாரியத்தின் மொத்த வருவாயில் சுமார் 30% ஆகும்.
- விவசாயிகளுக்கு மட்டும், இந்த ஆண்டு மானியத் தொகை 8,186 கோடி ரூபாயாக இருக்கும்.
- அனைத்து வகைகளுக்கும், கட்டண மானியம் ஆனது சுமார் 16,275 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- 2025-26 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட இழப்பு நிதியானது 16,000 கோடி ரூபாயாக இருக்கும்.

# தேசியச் செய்திகள்

## சேசெட் செயலி




- தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் (NDMA) அறிமுகப்படுத்திய ‘சேசெட்’ என்ற கைபேசி செயலியைப் பயன்படுத்துமாறு பிரதமர் மக்களை வலியுறுத்தியுள்ளார்.
- இயற்கைப் பேரிடர்களில் இருந்துத் தப்பிப்பதற்கான ஒரு தொடக்கத்தைப் பெற இது உதவும்.
- இந்தச் செயலியானது பொதுமக்களை எச்சரிப்பதற்காக நிகழ்நேரப் புவிசார் குறிச் சொற்கள் கொண்ட பேரிடர் எச்சரிக்கைகளை வழங்குகிறது.
- மேலும், இந்தச் செயலியானது வானிலை அறிக்கைகள் மற்றும் இந்திய வானிலை ஆய்வுத் துறையின் (IMD) தினசரியான வானிலைத் தகவல்களுக்கான பல்வேறு முன்னறிவிப்புகளையும் வழங்குகிறது.

## தட்டம்மை-ரூபெல்லா ஒழிப்பு பிரச்சாரம் 2025-26

- மத்திய அரசானது, மிகச் சமீபத்தில் தட்டம்மை-ரூபெல்லா (MR) பாதிப்புகள் ஒழிப்புப் பிரச்சாரத்தினைத் தொடங்கியுள்ளது.
- அடுத்த ஓராண்டில் இந்தியாவிலிருந்து இந்த வைரஸ் நோய்களை ஒழிப்பதற்கான ஒரு

இலக்கையும் இது நிர்ணயித்துள்ளது.

- 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2024 ஆம் ஆண்டில் பதிவான தட்டம்மைப் பாதிப்புகள் 73 சதவீதமும், ரூபெல்லா பாதிப்புகள் 17 சதவீதமும் குறைந்துள்ளன.
- M-R என்பது மிக முக்கியமாக குழந்தைகளைப் பாதிக்கும் தொற்று வைரஸ் நோய்கள் ஆகும்.
- தட்டம்மை ஆனது மோர்பிலி வைரசினாலும் (RNA வைரஸ்) மற்றும் ரூபெல்லாவானது ரூபெல்லா வைரசினாலும் ஏற்படுகிறது.



## PMLA சட்டத்தின் கீழ் I4C





- நிதி அமைச்சகம் ஆனது, பணமோசடி தடுப்புச் சட்டத்தின் 66வது சட்டப் பிரிவின் கீழ் I4C அமைப்பினையும் சேர்த்தது.
- பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ், அமலாக்க இயக்குநரகத்திலிருந்து முக்கியத் தகவல்களைப் பகிரவும் பெறவும் இந்திய இணையவெளிக் குற்ற ஒருங்கிணைப்பு மையத்திற்கு (I4C) இது அங்கீகாரம் அளித்தது.
- இது அமலாக்க இயக்குநரகம் மற்றும் பிற சட்ட அமலாக்க நிறுவனங்களிடமிருந்து

தகவல்களைப் பகிரவும் பெறவும் I4C மையத்திற்கு உதவும்.

- இது இணையவெளி மோசடிகளுக்குப் பின்னால் உள்ள முதன்மைச் சூத்திரதாரிகளை அடையாளம் காண உதவும்.

## BIMSTEC உச்சி மாநாட்டிற்கான 21 அம்ச செயல் திட்டம்




- தாய்லாந்து நாட்டினால் நடத்தப்பட்ட 6வது பல்துறை மற்றும் தொழில்நுட்பம் மீதான ஒத்துழைப்புக்கான (BIMSTEC) வங்காள விரிகுடா உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் உரையாற்றினார்.
- இந்த நிகழ்வின் கருத்துரு 'BIMSTEC: Prosperous, Resilient and Open' என்பதாகும்.
- இந்த நிகழ்வில் பாங்காக் தொலைநோக்குத் திட்டம் 2030 மற்றும் அதன் உறுப்பினர் நாடுகளுக்கு இடையே இணைப்பு மற்றும் ஈடுபாட்டை அதிகரிப்பதற்கான கடல் சார் போக்குவரத்து ஒப்பந்தம் ஆகியவை ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- இந்தியப் பிரதமர் BIMSTEC உச்சி மாநாட்டில் 21 அம்சங்கள் செயல் திட்டத்தினை முன் மொழிந்தார்.
- இது பிராந்திய இணைப்பு, பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் பல்வேறு தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- BIMSTEC அமைப்பின் உறுப்பினர் நாடுகளின் பண வழங்கீட்டு முறைகளுடன் சேர்த்து இந்தியாவின் ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகத்தினை (UPI) இணைப்பதும் இதில் அடங்கும்.
- இக்குழுவின் உறுப்பினர் நாடுகளிடையே ஈடுபாட்டை வலுப்படுத்துவதற்காக BIMSTEC வர்த்தக சபை அமைக்கப்படவுள்ளது.
- அவர் மனித வள உள்கட்டமைப்பு முன்னெடுப்பின் (BODHI) ஒழுங்கமைக்கப்பட்ட மேம்பாட்டிற்கான BIMSTEC முன்னெடுப்பினை முன்மொழிந்தார்.
- இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும், BIMSTEC நாடுகளைச் சேர்ந்த 300 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.
- அவர் BIMSTEC உறுப்பினர் நாடுகளுக்காக சிறிய செயற்கைக்கோள்களை உருவாக்கும் ஒரு திட்டத்தினை முன்மொழிந்தார் என்பதோடு தரைக் கட்டுப்பாட்டு நிலையங்களை நிறுவுவது குறித்து ஆராய்வதோடு தொலை உணர்வு தரவைப் பயன்படுத்துவதையும் ஊக்குவித்தார்.
- இந்தியாவில் நீடித்த நிலையான கடல் சார் போக்குவரத்து மையத்தினை நிறுவும் திட்டத்தினையும் அவர் முன்மொழிந்தார்.

- நாளந்தா பல்கலைக்கழகத்தில் ஒவ்வோர் ஆண்டும் BIMSTEC நாடுகளைச் சேர்ந்த இளம் அரசுமுறை அதிகாரிகளுக்குப் பயிற்சி வழங்கும் திட்டம் மற்றும் இந்திய வன ஆராய்ச்சி நிறுவனத்தில் BIMSTEC நாடுகளின் மாணவர்களுக்கான உதவித் தொகை அறிவித்தார்.
- டாடா நினைவு மையம் ஆனது, BIMSTEC நாடுகளில் புற்றுநோய் சிகிச்சையில் பயிற்சி மற்றும் திறனை வளர்ப்பதை ஆதரிக்கும்.
- இந்தத் திட்டத்தின் படி, இணைப்பு மற்றும் கலாச்சாரத்தினை மேம்படுத்துவதற்காக இந்த ஆண்டு இந்தியாவில் BIMSTEC பாரம்பரிய இசை விழா நடத்தப்படும்.
- மின்சாரக் கட்டமைப்பு ஒருங்கிணைப்பு தொடர்பானப் பணிகளை விரைவுப்படுத்த உள்ளதாகவும் அவர் கூறினார்.
- இந்தியா இந்த ஆண்டு BIMSTEC தடகளப் போட்டியை நடத்த உள்ளதாகவும், BIMSTEC அமைப்பின் 30வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் 2027 ஆம் ஆண்டில் BIMSTEC விளையாட்டுப் போட்டிகளை ஏற்பாடு செய்வதாக முன்மொழியப்பட்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## உலகின் ஒரே மைசெட்டோமா பாதிப்பு ஆராய்ச்சி மையம்





- உலகின் ஒரே மைசெட்டோமா பாதிப்பு ஆராய்ச்சி மையம் ஆனது, சூடானின் இரண்டு ஆண்டு காலப் போரில் அழிக்கப்பட்டுள்ளது.
- இந்த மையம் ஆனது, 50 ஆராய்ச்சியாளர்களை உள்ளடக்கியதாகவும், ஒவ்வோர் ஆண்டும் 12,000 நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கும் அளவுக்கு மேம்பட்டிருந்தது.
- மைசெட்டோமா என்பது விவசாயிகளிடையே மிகவும் பொதுவாகக் காணப்படும் ஒரு புறக்கணிக்கப் பட்ட வெப்பமண்டல நோயாகும்.
- பாக்டீரியா அல்லது பூஞ்சையால் ஏற்படுகின்ற இந்த மைசெட்டோமா பாதிப்பானது பொதுவாக வெட்டுக் காயங்கள் மூலம் உடலில் நுழைகிறது.
- தோல், தசை மற்றும் எலும்பை கூட பாதிக்கின்ற இது உடல் திசுக்களைப் படிப்படியாக அழிக்கும் தொற்று நோயாகும்.


## டைக்ஸியன் பவளப்பாறை

- தனது நாட்டின் கடலோரக் காவல்படையானது, டைக்ஸியன் பவளப்பாறை பகுதி மீது "கடல்சார் கட்டுப்பாட்டை" செயல்படுத்தியுள்ளதாக சீனா கூறுகிறது.
- சீனாவும் பிலிப்பைன்ஸும் தென் சீனக் கடலில் உள்ள சிறிய மணல் திட்டுகளில் தங்கள் தேசியக் கொடிகளை நாட்டியுள்ளன.

- சாண்டி கே பவளப்பாறையானது, பிலிப்பைன்ஸ் நாடு தனது படைவீரர்களை நிலை நிறுத்தி கடலோரக் காவல்படை கண்காணிப்புத் தளத்தை நடத்தி வருகின்ற திட்டு தீவு அல்லது பாக்-அசா அருகே அமைந்துள்ளது.




## இஸ்ரேல் - மொராக் வழித்தடம்





- தெற்கு காசாவின் மீது தனது கட்டுப்பாட்டை நன்கு விரிவுபடுத்துவதற்காக வேண்டி "மொராக் வழித்தடத்தின்" கட்டுப்பாட்டை இஸ்ரேல் கைப்பற்றியுள்ளது.
- இது ரஃபா மற்றும் கான் யூனிஸ் ஆகியப் பகுதிகளை இணைக்கும் ஓர் உத்திசார் வழித்தடமாகும்.
- மொராக் வழித்தடமானது, பிலடெல்பி மற்றும் நெட்ஸாரிம் வழித்தடங்கள் உள்ளிட்ட இஸ்ரேலின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மற்ற முக்கிய மண்டலங்களுடன் இணைகிறது.

## கைலாஷ் மானசரோவர் யாத்திரை 2025

- இந்த யாத்திரையானது லிபுலேக் மற்றும் டெம்சோக் வழியான மிகவும் சாத்தியமான வழிகளுடன், ஐந்தாண்டு கால இடைவெளிக்குப் பிறகு 2025 ஆம் ஆண்டில் மீண்டும் தொடங்கப்படவுள்ளது.

- கோவிட்-19 பெருந்தொற்று மற்றும் கிழக்கு லடாக்கில் ஏற்பட்ட அடுத்தடுத்தப் பதட்டச் சூழல்கள் காரணமாக 2020 ஆம் ஆண்டு முதல் இந்த யாத்திரையானது நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது.
- இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான அரசுமுறை உறவுகளின் 75 ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி இந்த யாத்திரை மீண்டும் தொடங்கப்பட்டது.
- இது ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மற்றும் செப்டம்பர் மாதங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் வெளியுறவு அமைச்சகத்தினால் (MEA) ஏற்பாடு செய்யப்படுகிறது.
- இது உத்தரகாண்டில் உள்ள லிபுலேக் கணவாய் (1981 ஆம் ஆண்டு முதல்) மற்றும் சிக்கிமில் உள்ள நாது லா கணவாய் (2015 ஆம் ஆண்டு முதல்) ஆகிய இரண்டு அதிகாரப் பூர்வ வழிகள் வழியாக மேற்கொள்ளப்படுகிறது.
- டெம்சோக் என்பது இந்தியாவிற்கும், சீனாவிற்கும் இடையில் உள்ள சர்ச்சைக்குரிய இந்திய நிர்வாகத்தின் டெம்சோக் துறையில் உள்ள ஒரு கிராமம் மற்றும் இராணுவ முகாம் ஆகும்.
- இந்தியாவின் லடாக் ஒன்றியப் பிரதேசத்தின் லே என்ற மாவட்டத்தில் உள்ள நியோமா தெஹ்சிலின் ஒரு பகுதியாக நிர்வகிக்கப்படுகின்ற இந்தப் பகுதியானது திபெத் தன்னாட்சிப் பகுதியின் ஒரு பகுதியாக சீனாவினால் உரிமை கோரப்படுகிறது.
- புனித மலைவாழ்த் தளமான கையிலாயம் மற்றும் மானசரோவர் புனித ஏரி ஆகியன திபெத்தில் அமைந்துள்ளன.
- இது சிவன் மற்றும் மாதா பார்வதியின் இருப்பிடமாக நம்பப்படுகிறது.
- இது இந்துக்கள், பௌத்தர்கள், சமணர்கள் மற்றும் போன்களால் (திபெத்தின் பூர்வீக சமயம்) புனித சிகரமாகக் கருதப்படுகிறது.
- சட்லஜ், பிரம்மபுத்திரா, கமலி மற்றும் சிந்து நதிகள் இங்கு உருவாவதால் புவியின் ஆன்மீக மையமாக கையிலாய மலை கருதப்படுகிறது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### செந்தலை கொண்ட செந்நிற ஓடுடைய ஆமைகள்

- 30 ஆண்டுகளுக்குப் பிறகு, மிக அருகி வரும் நிலையில் உள்ள 20 செந்தலை கொண்ட செந்நிற ஓடுடைய ஆமைகள் கங்கை நதியில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

- அதன் உயிரியல் பெயரான படகூர் கச்சுகா என்று அழைக்கப்படும் இந்த ஆமை வகையானது IUCN பட்டியலில் மிக அருகி வரும் நிலையில் உள்ளதாக வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- இது ஆசியாவின் மிக அருகி வரும் நிலையில் உள்ள ஆமைகள் மற்றும் நன்னீர் வாழ் ஆமைகள் பட்டியலில் உள்ள 50 இனங்களில் ஒன்றாகும்.
- இந்தியாவில், இந்த ஆமைகள் சம்பல் நதியில் மட்டுமே வாழ்கின்றன என்பதோடு கடந்த 30 ஆண்டுகளாக உலகில் வேறு எங்கும் அவை காணப்பட்டதற்கான எந்த ஒரு ஆதாரமும் இல்லை.
- சம்பல் நதியில், இந்தஆமைகளின் எண்ணிக்கை 300க்கும் குறைவாகவே உள்ளது.



## அசாமில் தங்கநிறப் புலி



- அசாமில் உள்ள புகழ்பெற்ற காசிரங்கா தேசியப் பூங்காவில் ஓர் அரிய தங்க நிறப் புலி கண்டறியப்பட்டுள்ளது.
- "கோல்டன் டேபி" என்றும் அழைக்கப்படும் இந்த தங்க நிறப் புலியானது, ஒரு மிகவும் தனித்துவமான இனம் அல்ல ஆனால் அரிதான ஒரு மரபணு விளைவின் காரணமாக உருவானதாகும்.
- உடலில் உள்ள நிறமியைப் பாதிக்கும் சூடோமெலனிசம் எனப்படுகின்ற ஒரு மரபணுப் பிறழ்வினால் இந்த அரிய நிலை ஏற்படுகிறது.

## மேகயான் 25

- இந்தியக் கடற்படையானது மேகயான் 25 எனப்படும் 3வது வானிலை மற்றும் கடல்சார் கருத்தரங்கினைத் தொடங்கியுள்ளது.
- மேகயான்-25 என்பது உலக வானிலை அமைப்பின் (WMO) கீழ் தொடங்கப்பட்ட 2025

ஆம் ஆண்டிற்கான ஒரு முதன்மையானப் பருவநிலைக் கண்காணிப்பு மற்றும் தரவுப் பகிர்வு முன்னெடுப்பாகும்.

- இது உலக வானிலை அமைப்பு (WMO) உருவாக்கப்பட்டதை நினைவு கூர்வதற்காகவும், 2025 ஆம் ஆண்டிற்கான WMO தினத்தினை (ஆண்டுதோறும் மார்ச் 23 அன்று கொண்டாடப் படுகிறது) கொண்டாடுவதற்கான நிகழ்ச்சியுமாகும்.
- 2025 ஆம் ஆண்டு WMO தினத்துடன் சேர்த்து நடத்தப்பட்ட இந்தக் கருத்தரங்கின் கருத்துரு, 'Closing the Early Warning Gap Together' என்பதாகும்.
- இது கடற்படை பெருங்கடல் ஆய்வியல் & வானிலை இயக்குநரகம் (DNOM) மற்றும் SAC-ISRO ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாக MOSDAC-IN எனும் வலைதளச் சேவைகள் தொடங்கப்பட்டன.
- இந்தியக் கடற்படையானது, 10 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு "சாகர்மாந்தன்" எனும் தனது தொழில்முறை இதழை அதன் 10வது பதிப்புடன் மீண்டும் வெளியிடத் தொடங்கியுள்ளது.
- WMO ஆனது ஐக்கிய நாடுகள் சபையின் (UN) சிறப்பு முகமையாகும்.
- இது வானிலை, செயல்பாட்டு நீரியல், பருவநிலை மற்றும் அதனுடன் தொடர்புடைய அறிவியல் துறைகளில் கவனம் செலுத்துகிறது.
- 1873 ஆம் ஆண்டு வியன்னா சர்வதேச வானிலை காங்கிரஸில் நிறுவப்பட்ட சர்வதேச வானிலை அமைப்பிலிருந்து (IMO) WMO உருவானது.
- 1950 ஆம் ஆண்டு மார்ச் 23 ஆம் தேதியன்று மிக அதிகாரப்பூர்வமாக நிறுவப்பட்ட WMO அமைப்பின் தலைமையகமானது சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனீவா நகரில் அமைந்து உள்ளது.
- இது 1951 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு முகமையாக மாறியது.





# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## சமூகப் பாதுகாப்பு நிலை குறித்த அறிக்கை 2025

- உலக வங்கியானது, சமூகப் பாதுகாப்பு நிலை குறித்த அறிக்கை 2025: The 2-Billion-Person Challenge என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- கடந்த 10 ஆண்டுகளில், குறைவான மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் உள்ள 4.7 பில்லியன் மக்கள் சமூகப் பாதுகாப்பிற்கான அணுகலைப் பெற்றுள்ளனர்.
- இருப்பினும், அந்த நாடுகளில் உள்ள இரண்டு பில்லியன் மக்கள், சமூகப் பாதுகாப்பின் பலன்களைப் பெறாமல் அல்லது போதிய அளவில் பெறாமல் உள்ளனர்.
- குறைவான வருமானம் கொண்ட நாடுகளில் உள்ள நான்கு பேரில் மூன்று பேர் எந்த விதமான சமூகப் பாதுகாப்புப் பலனையும் பெறவில்லை.

- மிகவும் குறைவான மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் கூட, மக்கள் தொகையில் பெரும் பாதிக்கும் மேற்பட்டவர்கள் சமூகப் பாதுகாப்பின் பலன்களைப் பெறாமல் உள்ளனர்.
- தற்போதைய வளர்ச்சி விகிதங்களின்படி, மிகவும் கடுமையான வறுமை நிலையில் வாழ்பவர்கள் முழுமையான சமூகப் பாதுகாப்பு பலன்களை பெறுவதற்கு இன்னும் 18 ஆண்டுகளும், குறைவான மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் உள்ள 20% ஏழைக் குடும்பங்கள் சமூகப் பாதுகாப்புப் பலன்களை பெற இன்னும் 20 ஆண்டுகளும் ஆகும்.
- குறைவான வருமானம் உள்ள நாடுகளில், சமூக உதவி சார் நிதிப் பரிமாற்றங்கள் ஆனது ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்களின் வருமானத்தில் வெறும் 11% மட்டுமே.
- இந்த அறிக்கைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 27 நாடுகளின் மாதிரியில் சமூகப் பாதுகாப்புப் பலன்களில் மிகவும் சராசரியாக ஆண்களால் பெறப்பட்ட ஒவ்வொரு 1 டாலருக்கும் பெண்கள் 81 சென்ட்கள் மட்டுமே பெறுவதால் பாலினப் பாகுபாடுகள் பெருமளவில் தொடர்கின்றன.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## BRICS நாடுகளின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர்கள் கூட்டம்




- BRICS உறுப்பினர் நாடுகளின் 2025 ஆம் ஆண்டு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர்கள் கூட்டம் ஆனது பிரேசிலியாவில் நடைபெற்றது.
- இது இரண்டு கருப்பொருள்களை கொண்ட ஒரு பிரகடனத்தை ஏற்றுக் கொண்டது.
    - செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் வேலைவாய்ப்புகளின்/படைப்புகளின் எதிர்

காலம்

- ○ வேலைவாய்ப்புச் சூழலில் பருவநிலை மாற்றத்தின் தாக்கங்கள் மற்றும் ஒரு நியாயமான மாற்றம்.

❖ இது தொழிலாளர் பாதுகாப்புடன் பல புதுமைகளைச் சமநிலைப்படுத்தும் உள்ளார்ந்த செயற்கை நுண்ணறிவுக் கொள்கைகளை ஊக்குவிப்பதையும் உகந்த வகையிலான பருவநிலை மாற்றங்களை உறுதி செய்வதற்காக என சமூகப் பேச்சுவார்த்தையினை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச கழுதைப் புலி தினம் 2025 - ஏப்ரல் 27




❖ மொத்தமாக நான்கு தனித்துவமான கழுதைப் புலி இனங்கள் உள்ளன.

❖ இவற்றில் மத்தியக் கிழக்கு மற்றும் ஆசியாவிலும் காணப்படும் வரிகள் கொண்ட கழுதைப் புலிகள் (ஹைனா ஹைனா), பழுப்பு நிற கழுதைப் புலிகள் (பராஹ்யேனா ப்ரூனியா), நில ஓநாய் (புரோட்டீல்ஸ் கிறிஸ்டேட்டஸ்) மற்றும் புள்ளிகள் கொண்ட கழுதைப் புலிகள் (குரோகுட்டா குரோகுட்டா) ஆகியவை அடங்கும்.

❖ புள்ளிகள் கொண்ட கழுதைப் புலிகள் என்பது ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதி முழுவதும் காணப்படும் நான்கு இனங்களில் மிகவும் பரவலான மற்றும் நன்கு ஆய்வு செய்யப்பட்டதாகும்.

- இந்த விலங்குகள் 'கிளான்ஸ்' எனப்படும் பெண் கழுதைப் புலிகளால் (ஆண் கழுதைப் புலிகளை விட பெரியவை மற்றும் வலிமையானவை) வழி நடத்தப் படும் வகையான வித்தியாசமான குழுக்களில் வாழ்கின்றன.
- வடக்கு மற்றும் கிழக்கு ஆப்பிரிக்காவில் காணப்படும் வரிகள் கொண்ட கழுதைப் புலிகள், முதன்மையாக இரவு நேரங்களில் வாழ்பவை மற்றும் மிக தனிமையானவை ஆகும்.
- இது இந்தியாவில் காணப்படும் மிகவும் பொதுவான இனமாகும்.
- பழுப்பு நிற கழுதைப் புலிகள் முதன்மையாக தென்னாப்பிரிக்காவின் வறண்ட பாலை வனங்கள் மற்றும் புல்வெளிகளில்/சவானாக்களில் காணப்படுகிறது என்பதோடு இது பெரும்பாலும் இறந்த உயிரினங்களை உண்ணும் இனமாகும்.
- மிகச்சிறிய மற்றும் மிகவும் சிறப்பு வாய்ந்த கழுதைப் புலிகள் நில ஓநாய்கள் ஆகும்.
- அவை ஓநாய்களும் அல்ல அல்லது அவற்றுடன் தொடர்புடையவையும் அல்ல.

# இதரச் செய்திகள்

## தெற்காசிய மர மூஞ்சூறு

- இந்திய விலங்கியல் ஆய்வு மையம் (ZSI) ஆனது, வகை பிரித்தல் பற்றிய பல்வேறு புதிய தகவல்களை வெளிப்படுத்தியுள்ளது.
- இவை வரலாற்று ரீதியாக முதன்மை கால / தொடக்கக் காலப் பாலூட்டி உயரினம் என தவறாக வகைப்படுத்தப்பட்டிருந்த மர மூஞ்சூறு இனங்கள் ஆகும். இவற்றுள் சில மரவாழ் இனங்கள், சில பகுதியளவு மரவாழ் இனங்கள் மற்றும் பிற நிலப்பரப்பு வாழ் உயிரினங்களாக உள்ளன.
- அவை தற்போது தெற்கு ஆசியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் காணப்படும் பாலூட்டிகளின் பழங்கால மரபுவழி இனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- ஆனால், மர மூஞ்சூறு இனங்கள் என்பவை உண்மையான மூஞ்சூறு இனங்கள் அல்லது அணில்கள் அல்ல ஆனால் அவை ஸ்காண்டன்ஷியா எனப்படும் தனித்துவமான இன வரிசையைச் சேர்ந்தவை.
- ஒரு பகுப்பாய்வு ஆனது இது தெற்காசியாவிலேயே மிகப்பெரியது மற்றும் உலகளவில் அறியப்பட்ட சுமார் 23 மர மூஞ்சூறு இனங்களில் மூன்றாவது பெரியது என்பதைக் காட்டுகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★